திருச்சி ரயில்வே ஜங்சன் அரிஸ்டோ மேம்பாலம் பணிகள் முடிவுற்ற நிலையில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பொதுமக்களின் போக்குவரத்து பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த விழாவில் பாராளுமன்ற திருச்சி தொகுதி உறுப்பினர் திருநாவுக்கரசர் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன், மாநகர காவல் ஆணையர் சத்திய பிரியா,சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின் குமார்,மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, நகர பொறியாளர் சிவபாதம், டோல்கேட் சுப்பிரமணிபகுதிச் செயலாளர்கள் ராம்குமார் இளங்கோ நாகராஜ் கவுன்சிலர்கள் முத்துச்செல்வம், காஜாமலை விஜி கிராபட்டி செல்வம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை கரூர் மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடுவது குறித்து கரூர் கலைஞர் அறிவாலயத்தில் கரூர் மாவட்ட செயற்குழு கூட்டம் அவைத்தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளரும், அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் கே சி. பழனிச்சாமி, நெசவாளர் அணி செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என் மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி மணி, வர்த்தக அணி துணைச் செயலாளர் பல்லவி ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க. சிவகாமசுந்தரி. மாவட்ட நிர்வாகிகள் எஸ். மகேஸ்வரி சுப்பிரமணி, பூவை ரமேஷ்பாபு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ ராமர், குளித்தலை சிவராமன், சுப. ராஜகோபால் உள்ளிட்ட நிர்வாகிகள் அருகில் உள்ளனர்.

100 இளைஞர்களுக்கு இலவச திருமணம்! 100 இடங்களில்

கரூர் மாவட்டம் முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிவிப்பு!

கரூர், மே 30-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை யொட்டி கரூர் மாவட்டம் குளித்தலையில் கலைஞருக்கு சிலை அமைப்பது, 100 ஜோடிகளுக்கு இலவச திருமணம், 100 இடங்களில் கவியரங்கம் பொதுக்கூட்டங்கள் நடத்துவது என கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் நல்லாசிகளுடன், கரூர் மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம், கரூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார்.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத் துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே. பல்லவிராஜா, தொழிலாளர் அணி செயலாளர் விஜயகுமார்

எம்.எல்.ஏ.க்கள் இரா. மாணிக்கம், பி.ஆர். இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்ட நிர்வாகிகள் எம்.எஸ்.கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, பூவை ரமேஷ்பாபு, வி.பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, என்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி, எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம்

கரூர் மாநகர கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், பகுதி கழக செயலாளர்கள் கரூர் கணேசன், க.சுப்பிரமணியன், க.அன்பரசன், ஆர்.எஸ்.ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.எஸ்.மணியன், என்.மணிகண்டன், கே.கருணாநிதி, த.கார்த்திக், சி.வளர்மதி, எம்.ரகுநாதன், கே.பாஸ்கரன், கே.ரவிராஜா, எம்.ராமலிங்கம், கே.வீராசாமி (எ) சுதாகர், அ.சந்திரன், இரா.ராமர் (முன்னாள் எம்.எல்.ஏ), ஜி.அண்ணாதுரை, சி கதிரவன், எல். கரிகாலன், ப.முத்துக்குமார், விகே வேலுச்சாமி, என். செல்வராஜ், ப.தியாகராஜன், பள்ளப்பட்டி நகர கழக பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர கழக செயலாளர் ஏ.குணசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் க.முரளிராஜா, கா.அம்மையப்பன், சி.தங்கராஜ், எம்.சசிக்குமார், ஆர்.மோகன் ராஜ், இ.ரவீந்திரன், எம்.முத்து (எ) சுப்பிரமணி, அணிகளின் அமைப்பாளர்கள் எஸ். சக்திவேல், ஜிம் சிவா, கலாவதி சக்திவேல், ஜெ.பிரின்சி, இரா.குடியரசு, பழ.அப்பாசாமி, பி பாலு பி.சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, பாக்கிய ரகுபதி, ஆர்.ஜோதிபாசு, பி. மோகனசுப்பு, சி.நவாஸ்கான், ம.அம்பிகாபதி, தம்பி சுதாகர், வி.ஆர்.அண்ணாவேலு முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :-

நூற்றாண்டு நாயகர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத்திட்டங்களையும் ஓராண்டு முழுவதும் எடுத்துரைத்தாலும் முழுமை அடையாது என்றாலும், தமிழ்நாட்டின் வருங்கால தலைமுறையினர் அவரை என்றென்றும் நினைவில்கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழா வினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் நடத்த கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உயர்நிலை செயல்திட்டக் குழு கூட்டத் தீர்மானத்தின்படி கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல் வாழ்த்துகளுடன், தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை, கரூர் மாவட்டத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடுவது,

அந்த வகையில், சட்டமன்றத் தேர்தலில் நின்ற தொகுதிகளில் எல்லாம் வெற்றி கண்ட, அவரது முதல் தொகுதியான குளித்தலையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு சிலை திறப்பது, 100 ஜோடிகளுக்கு இலவச திருமணங்கள் நடத்தி வைப்பது, 100 இடங்களில் பிரம்மாண்டமாக கூட்டங்கள், கவியரங்கங்கள், பட்டிமன்றம் உட்பட நிகழ்ச்சிகள் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை எழுச்சியோடு கொண்டாடுவோம்!

நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்! அ.சுபேர்கான் பேச்சு!

சென்னை,மே 30-

சமூக நீதி நாயகர் தமிழ் நாடு முதல்வர்; கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தி.மு.கழக சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவின் சார்பாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாக்கொண்டாட்டம் குறித்த மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் எம்.எஸ் (ஆர்த்தோ) தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநில துணைச் செயலாளர்கள் முனவர் ஜான், வி.ஜோசப் ராஜ், இரா.அன்வர்கான், வீ.விஜயகுமார், எம். நூருல்லா, அடையாறு ஷபீல், ரபி அஹமது, நாகை மு.சாகுல் அமீது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், நவீன தமிழ்நாட்டின் சிற்பி; தமிழினத்தலைவர்; முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பாக ஆண்டு முழுவதும் தொடர் நிகழ்சிகள் நடத்தி எழுச்சியோடு கொண்டாடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதில், ஏழை எளியோர், ஆதரவற்றோர் பயன்பெறும் வகையில் உணவு வழங்குதல்,

ஏழைஎளிய மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு நேரில் சென்று இலவச கண், இருதயம் மற்றும் சிறப்பு பொது மருத்துவ முகாம்களை நடத்துதல்,

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்,

அரசுப் பள்ளி மற்றும் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக நூலகங்களுக்கு புதிய புத்தகங்களை வழங்குதல்,

தன் வாழ்நாளெல்லாம் சிறுபான்மையினரை கண்ணின் இமைபோல காத்து சிறுபான்மையினருக்கு பல்வேறு நலத்திட்டங்களை பெற்றுத்தந்த தலைவர் கலைஞர் அவர்களின் மார்பளவு வெண்கல திருவுருவச் சிலையை நிறுவுதல்,

தலைவர் கலைஞர் அவர்கள் சிறுபான்மையின மக்களுக்கு ஆற்றிய தொண்டுகள் மற்றும் சாதனைகளை கருத்தரங்கம், பட்டிமன்றம், பாட்டுமன்றம் மற்றும் ஒளித்திரை மூலம் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஒலிக்கச் செய்தல்.

மேலும், தலைமைக் கழக ஒப்புதலுடன் 72 மாவட்ட கழகங்களை 11 மண்டலங்களாக தொகுத்து சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகளை மண்டல பொறுப்பாளர்களாக நியமித்து முத்தமிழறிஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழாக் கொண்டாட்டங்களை எழுச்சியோடு நடத்துதல் மற்றும் அணியின் அடுத்தகட்ட செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட பல சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நூற்றாண்டு நாயகர்

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை ஆண்டு முழுதும் கொண்டாடுவோம்!

தி.மு.க. விவசாய தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் அன்னியூர் சிவா தலைமையில் தீர்மானம்!

சென்னை, மே 30-

தி.மு.க. விவசாயத்தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் 27.05.2023, சனிக்கிழமை மாலை 4.00 மணி அளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் மாநில செயலாளர் அன்னியூர் சிவா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அது வருமாறு:-

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் "நூற்றாண்டு விழா"வினை ஆண்டு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவோம்.

தமிழே உயிராக தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும். தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வறியாச் சூரியனும் தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டு கால பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரரும் ஒரு நூற்றாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டு காலப் பங்களிப்பாளரும், அரை நூற்றாண்டு காலம் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவரும். களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளரும், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவரும் இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவரும், இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் என தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளரும், தான் ஆட்சிக் கட்டிலில் முதலமைச்சராக அமர்ந்தபோதெல்லாம். தமிழ்நாட்டு விவசாயிகளின் நலனை முன்னிறுத்தி, அவ்விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வகுத்து, விவசாயிகளின் பாதுகாவலாக இருந்தவரும். உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்தவருமான நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு 2023 சூன் 3ஆம் தேதி தொடங்கவுள்ளதையொட்டி:

நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி;

ஜூன் 3 அன்று வட சென்னையில் நடைபெறும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக் கூட்டத்திலும், ஜூன் 20-ஆம் நாள் திருவாரூரில் எழிலுற அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்ட திறப்பு விழாவிலும்; 2023 ஜூன் 3 தொடங்கி, 2024 ஜூன் 3 வரை ஓராண்டு காலத்திற்குத் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடத்திடவும்:

ஊர் தோறும் தி.மு.க. எனும் தலைப்பில், கிளை அளவில் இருக்கும் நமது பழைய கொடிக் கம்பங்களைப் புதுப்பித்து, புதிய இரு வண்ண கொடியேற்றிடவும்; "எங்கெங்கும் கலைஞர்" என்ற அடிப்படையில் கலைஞரின் முழு உருவச் சிலை. மார்பளவு சிலைகளை அமைப்பதற்கான முயற்சிகளில் கழக விவசாயத் தொழிலாளர் அணியினர் ஈடுபடுத்திக் கொள்ளவும்;

கழகமே குடும்பம்' எனும் தலைப்பில், பொற்கிழி வழங்க ஏற்பாடு செய்வதில் கழக விவசாயத் தொழிலாளர் அணியினர் சிறிய அளவிலாவது பங்கேற்றிடவும்.

'என்றென்றும் கலைஞர்' எனும் தலைப்பில் கருத்தரங்கம். பொதுக்கூட்டம் போன்ற நிகழ்வுகளில் தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் நிர்வாகிகள் மற்றும் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு,

தமிழ்நாடு முழுவதும் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினை தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மிகச்சிறப்பாக கொண்டாடிட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழகத்தின் பாரம்பரியமான ஜல்லிக்கட்டு விளையாட்டினை உச்சநீதிமன்றம் வரை சென்று சட்டப்பூர்வமாக வெற்றி பெற கடுமையாக முயற்சி எடுத்த தமிழ் நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றியினையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

"உடன்பிறப்புக்களாய் இணைவோம்' என்ற அடிப்படையில் தொகுதிக்கு 50 ஆயிரம் உறுப்பினர்களை சேர்க்கும் பணியில் கழக நிர்வாகிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட கழக விவசாயத் தொழிலாளர் அணி நிர்வாகிகளை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வடகாடு த. நல்லதம்பி
மே 30 (2014)



தமது இளம் வயதிலேயே திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு,நாடக மன்றம் ஒன்றினை தானே துவக்கி, அதில் தானும் நடித்து அப்பகுதி முழுவதும் திராவிடக் கொள்கைகளை பரப்பினார். கழகம் துவங்கிய பின்னர் அதில் இணைந்து பணியாற்றினார்.

அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணி இயக்கத்தில் ஆலங்குடி பகுதி தலைவர் – திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட விவசாய அணிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நிலவள வங்கி தலைவராகவும், இயக்குநராகவும் – மாவட்ட அரசு மருத்துவமனை ஆலோசனை உறுப்பினராக பதவி வகித்தவர்.

1962 விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1964 இந்தி எதிர்ப்பு சட்ட எரிப்பு போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் – 1986 சட்டநகல் எரிப்பு போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறைத் தண்டனை பெற்றதோடு நெருக்கடி நிலை மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மு. அரங்கநாதன்
மே 30 (2004)

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலம் தொட்டு கழகப் பணியாற்றியவர்.

திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றவர்.

விலைவாசிப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.